## திராவிட முன்னேற்றக் கழக அரசு

# காலத்துக்கு ஏற்ப தங்களை தகவமைத்துக் கொண்டு வருகிறது!

## ஓசூரில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

ஓசூர், ஜன.21 -

**தி.மு.க. தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதலின்படி, 2026 சட்டப் பேரவைத் தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு ஜனவரி 19 ஆம் தேதி தொடங்கி தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுக்கு கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி தலைமையில் டி.கே.எஸ்.இளங்கோவன், அமைச்சர்கள் கோவி.செழியன், பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், டி.ஆர்.பி.ராஜா மற்றும் எம்.எம்.அப்துல்லா, கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், எழிலன் நாகநாதன், கார்த்திகேய சிவசேனாபதி, ஆ.தமிழரசி ரவிக்குமார், ஜி.சந்தானம் ஐ.ஏ.எஸ், சுரேஷ் சம்பந்தம் ஆகிய 12 பேர் அடங்கிய குழு பயணம் செய்து பொதுமக்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சந்தித்து தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரை களை அளிக்கவுள்ளனர்.**

இந்த நிலையில், நேற்று முன்தினம் (19.01.2026) சட்டமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவின் கருத்துக் கேட்புக் கூட்டம் கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் ஆனந்த் கிராண்ட் பேலஸில் தொடங்கியது. தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவின் முதல் கருத்துக் கேட்புக் கூட்டம் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத்தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், கனிமொழி கருணாநிதி எம்.பி., டி.கே.எஸ்.இளங்கோவன், அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, எம்.எம்.அப்துல்லா, கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், எழிலன் நாகநாதன், கார்த்திகேய சிவசேனாபதி, ஆ.தமிழரசி ரவிக்குமார், ஜி.சந்தானம் ஐ.ஏ.எஸ், சுரேஷ் குழு உறுப்பினர்கள், தொழில் முனைவோர், விவசாயிகள், வணிகர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் கோரிக்கைகள் மற்றும் கருத்துகளை கேட்டறிந்தனர்.

இதைத் தொடர்ந்து பேசிய கனிமொழி கருணாநிதி எம்.பி: முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், இந்த தேர்தல் அறிக்கை குழு மக்களைச் சந்தித்து, அவர்களின் கருத்துகள் மற்றும் கோரிக்கைகளை கேட்டறிந்து தேர்தல் அறிக்கை தயாரிக்க வேண்டும் என்று எங்களை பணித்துள்ளார். அந்த பணியை ஏற்று, இன்று குழுவின் முதல் சந்திப்பு ஓசூரில் தொடங்கியுள்ளோம்.

“மக்களைத் தேடிச் செல்லுங்கள், மக்களிடம் செல்லுங்கள்” என்று பேரறிஞர் அண்ணா கூறினார். அந்த வழியில், திராவிட முன்னேற்றக் கழகம் ஒவ்வொரு முறையும் மக்களிடமிருந்து கருத்துகளை கேட்டறிந்து, மக்களுடைய தேர்தல் அறிக்கை யாகவே எழுதப்படுகிறது.

“சொல்வதை செய்வோம், செய்வதை சொல்லுவோம்” என்று கலைஞர் கூறுவார். கடந்த தேர்தல் அறிக்கையில் தி.மு.க. 505 தேர்தல் வாக்குறுதிகளை வழங்கியது. அவற்றில் 404 வாக்குறுதிகளை தி.மு.க. அரசு நிறைவேற்றி யுள்ளது. இருப்பினும், பலர் எத்தனை தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்றும், அதற்கான வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்றும் கேட்கிறார்கள்.

ஒன்றிய அரசு ஒவ்வொரு நாளும் தமிழ்நாடு அரசுக்கு இடைஞ்சல் செய்து வருகிறார்கள். அதற்கு இடையிலும் தமிழகத்தை முன்னேறிய மாநிலமாக உருவாக்கி வருகிறோம்.

ஒன்றிய அரசு, ஓசூரில் விமான நிலையம்அமைக்க முடியாது என தெரிவித்து வருகிறது. ஆனால், முடியாததையும் முடித்துக் காட்டும் தி.மு.க. அரசு, ஓசூரில் விமான நிலையம் அமையும் என நமது தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா இங்கு தெரிவித்துள்ளார். ஒன்றிய அரசு நிதி வழங்காவிட்டாலும், எவ்வளவு தடைகள் ஏற்படுத்தப்பட்டாலும், மீதமுள்ள 101 வாக்குறுதிகளையும் தி.மு.க. அரசு நிறை வேற்றும்.



நிறைவேற்றிக் காட்டுவோம் என்ற நம்பிக்கையில் உங்களைச் சந்திக்க நாங்கள் வந்துள்ளோம். உங்களுடைய கருத்துகளை கேட்டு, எதெல்லாம் சாத்தியமோ அவை அனைத்தையும் தேர்தல் அறிக்கையில் இணைக்கப்படும் என்ற உறுதியை நான் வழங்குகிறேன்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மக்களின் கருத்துகளை அறிந்துகொள்ள தனியாக ஒரு ஆன்லைன் போர்டல் (செயலியை) ஏற்படுத்தி உள்ளார். அதில் மக்கள் தங்கள் தேர்தல் வாக்குறுதிகளில் தெரிவிக்க வேண்டிய கருத்துகளை தெரிவிக்கலாம்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்துக்கு ஏற்ப தங்களை தகவமைத்து கொண்டு வருகிறது. ஃபேஸ்புக், ட்விட்டர் போன்ற சமூக ஊடகங்கள் வருவதற்கு முன்பே முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி சமூக வலைதளங்களில் மிகவும் ஆக்டிவாக இருந்தார். அந்த வழியில், ஆன்லைன் போர்டல் மூலம் உலகத்தின் எந்த மூலையில் தமிழர்கள் இருந்தாலும், தங்களுடைய கருத்துகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ள முடியும். செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence – AI) மூலமாகவும் இந்த தேர்தல் அறிக்கையை உருவாக்க உள்ளோம். மேலும், மக்களிடமே நேரடியாக வரக்கூடிய ஒரே இயக்கம் தி.மு.க. என்று பேசினார்.

கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டத்தைச் சார்ந்த வணிகர் சங்கங்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள், நெசவாளர்கள், மீனவ சங்கங்கள், தொழிற் சங்கங்கள், தொழில் முனைவோர், மாணவர் சங்கங்கள், கல்வியாளர்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள், தன்னார்வலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டங்கள்!

4 - ஆம் பக்கத் தொடர்ச்சி

**ஜெயங்கொண்டம்** - முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், எம்.பி.,
மாண்புமிகு சா.சி. சிவசங்கர்
துரை கி.சரவணன்
மு. ராமமூர்த்தி

**பெரியகுளம்** - கவிஞர் சல்மா, எம்.பி.,
ஏ.கே.எஸ். விஜயன்
தங்க தமிழ்செல்வன், எம்.பி.,
நாத்திகம் நாகராஜன்
கு. சுருதி

**தென்காசி** - வழக்கறிஞர் மனோஜ் பாண்டியன்
வழக்கறிஞர் அ. சரவணன்
ஜெயபாலன்
போடி எஸ்.எஸ்.கலைச்செல்வன்
என்.எஸ்.சாகுல்ஹமீதுகான்

**ஆத்தூர்** - வி.பி. இராஜன்
எஸ்.ஆர். சிவலிங்கம், எம்.பி.,
கவிஞர் குடியாத்தம் பாரி
மருத்துவர் எஸ். திவ்யா

**திருவெறும்பூர்** - மாண்புமிகு அன்பில்மகேஸ் பொய்யாமொழி
செந்தலை கவுதமன்
சிறுவானூர் பரசுராமன்
பால கணபதி

**மதுரை மாநகர்** - மாண்புமிகு பழனிவேல் தியாகராஜன்
கோ. தளபதி, எம்.எல்.ஏ.,
அதலை செந்தில்குமார்
பசும்பொன் ரவிச்சந்திரன்
ஞா. கதிரவன்

**இராமநாதபுரம்** - மாண்புமிகு ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன்
காதர்பாட்சா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ.,
தமிழ்பிரியா
ஒப்பிலாமணி
வா.சந்தானலெட்சுமி

**மன்னார்குடி** - மாண்புமிகு டி.ஆர்.பி. ராஜா,
பூண்டி கே.கலைவாணன், எம்.எல்.ஏ.,
மன்னை சோழராஜன்
ஜெ. விக்னேஷ்வரி

**விழுப்புரம்** - இரா. கிரிராஜன், எம்.பி.,
பொள்ளாச்சி உமாபதி
டாக்டர் ஆர்.இலட்சுமணன், எம்.எல்.ஏ.,
ஆவடி பாஸ்கர்
அப்துல் வஹாப்

**நாமக்கல்** - மாண்புமிகு மா.மதிவேந்தன்
கவிஞர் ஈரோடு இறைவன்
கே.ஆர்.என். ராஜேஸ்குமார், எம்.பி.,
சூ.க.தாரணி

**இராணிப்பேட்டை** - மாண்புமிகு ஆர். காந்தி
தமிழ் கா.அமுதரசன்
வே. அன்புவாணன்
த. கங்கா

**கிருஷ்ணகிரி** - டாக்டர் கலாநிதி வீராசாமி, எம்.பி.,
தே. மதியழகன், எம்.எல்.ஏ.,
ஆலந்தூர் மலர்மன்னன்
சி. பவித்ரா

**கீழ்வேளூர்** - மருத்துவர் கனிமொழி சோமு, எம்.பி.,
மதுரை பாலா
என்.கௌதமன்
வேலூர் ரமேஷ்
பா. அருண்குமார்

**சங்கராபுரம்** - நெல்லிக்குப்பம் புகழேந்தி
தா. உதயசூரியன், எம்.எல்.ஏ.,
தக்கோலம் ந.தேவபாலன்
எஸ். யமுனா

**காட்பாடி** - பேராசிரியர் கான்ஸ்டன்டைன் இரவீந்திரன்
டி.எம்.கதிர்ஆனந்த், எம்.பி.,
பொன்னேரி சிவா
ம.ஜ.சந்தீப்

**வேடசந்தூர்** - மாண்புமிகு அர.சக்கரபாணி
சூர்யா வெற்றிகொண்டான்
திருமதி தமிழரசி ரவிக்குமார்
அ. சுஹாசினி

**ஓசூர்** - எஸ்.கே.பி. கருணாநிதி
ஒய். பிரகாஷ், எம்.எல்.ஏ.,
மாரியப்பன் கென்னடி
இலயோலா டி.ராஜசேகர்
செ.பவண்யா

**சோழவந்தான்** - மாண்புமிகு பி. மூர்த்தி
அன்வர் ராஜா
தீக்கனல் என்.செல்வம்
மு. ரோஜா

**முசிறி** - மருது அழகுராஜ்
ந.தியாகராஜன், எம்.எல்.ஏ.,
சேலம் கோவிந்தன்
சை. சேக் அலிமாஸ் அலி

**பணகுடி** - இயக்குனர் கரு. பழனியப்பன்
ம. கிரகாம்பெல்
உடன்குடி தனபால்
சகாய பெயிலா

**ஈரோடு** - மாண்புமிகு சு.முத்துசாமி
வே. மதிமாறன்
திருமதி ஜெ. வீரமணி
ம. மோகநிதி

**கும்மிடிப்பூண்டி** - மருத்துவர் நா. எழிலன், எம்.எல்.ஏ.,
எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ்
எழும்பூர் கோபி
காஞ்சி பாஸ்கர்
விக்னேஷ் உதயன்

**திருநெல்வேலி** - வழக்கறிஞர் சிவ.ஜெயராஜ்
மு. அப்துல்வகாப், எம்.எல்.ஏ.,
நாகை மு.சாகுல்அமீது
சே. ரகுமான்

**தொண்டாமுத்தூர்** - சிவாஜி கிருஷ்ணமூர்த்தி
தொ.அ. ரவி
அத்திப்பட்டு சாம்ராஜ்
சிங்கை பிரபாகரன்
ஜெ. ஸ்ரீபநாதன்

**நெய்வேலி** - மாண்புமிகு சி.வெ.கணேசன்
திருமதி திவ்யா சத்தியராஜ்
ஆம்பூர் தருமன்
க.முல்லைவேந்தன்

**குமாரபாளையம்** - ராஜா தமிழ்மாறன்
சாவல்பூண்டி மா. சுந்தரேசன்
கே.எஸ். மூர்த்தி
க. நந்தகுமார்

**விளாத்திகுளம்** - மாண்புமிகு பெ.கீதாஜீவன்
திருமதி ஆண்டாள் பிரியதர்ஷினி
மன்னை சோம.இளங்கோவன்
நாகம்மை கருப்பையா
செ. சஞ்சய்

**ஒட்டபிடாரம்** - மாண்புமிகு அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன்
ச.அ. பெருநற்கிள்ளி
வழக்கறிஞர் மதிவாணன்
திருப்பத்தூர் ரஜினி
உமா ராணி

**நாகர்கோவில்** - சைதை சாதிக்
ரெ. மகேஷ்
குடந்தை ராமகிருஷ்ணன்
விஜயராஜ்

**சிவகங்கை** - மாண்புமிகு கேஆர். பெரியகருப்பன்
சேலம் சுஜாதா
திருமதி பூர்ணசங்கீதா சின்னமுத்து
ஜெ. ராமகிருஷ்ணன்
சி. ராஜபாரதி

**சேலம் வடக்கு** - மாண்புமிகு இரா. இராஜேந்திரன்
வி.சி. சந்திரகுமார், எம்.எல்.ஏ.,
சேலம் தமிழரசன்
வெ.சரண்யா

**பத்மநாபபுரம்** - மாண்புமிகு மனோ தங்கராஜ்
சூர்யா கிருஷ்ணமூர்த்தி
கொக்கரக்கோ சௌமியன்
ஜெ. ஜெபின்

**புதுச்சேரி** - கோவி. லெனின்
புதுச்சேரி ஆர்.சிவா, எம்.எல்.ஏ.,
போர்முரசு கதிரவன்
வெற்றிச்செல்வன்

**அம்பாசமுத்திரம்** - சூர்யா சேவியர்
இரா. ஆவுடையப்பன்
கல்லிடைகனல் என்.பேச்சி
கந்த பரமேஸ்வரன்

**திருவள்ளூர்** - செல்வி பத்மபிரியா
எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ.,
வி.ஜி. ராஜேந்திரன், எம்.எல்.ஏ.,
பம்மல் இப்ராகீம்
க. ஷேவிதா

**பேரையூர்** - மூத்த வழக்கறிஞர் பி. வில்சன், எம்.பி.,
ஆரணி மாலா
மு. மணிமாறன்
பேனா தெய்வம்

**பெரம்பலூர்** - அன்னியூர் சிவா, எம்.எல்.ஏ.,
நடிகர் போஸ் வெங்கட்
வீ. ஜெகதீசன்
சேர்க்காடு கென்னடி
நா.காருண்யா

**கூடலூர்** - திப்பம்பட்டி ஆறுச்சாமி
கே.எம்.ராஜு
கோனூர் வைரமணி
ச.தஸ்லிமா நஸ்ரின்

**அரூர்** - வழக்கறிஞர் வி. வைத்தியலிங்கம்
ஆ. மணி, எம்.பி.,
சஹா. விக்னேஷ்
த. தங்கமுத்து

**கோபிசெட்டிபாளையம்** - கவிஞர் காசிமுத்துமாணிக்கம்
என். நல்லசிவம்
திருப்பூர் கூத்தரசன்
மு.கௌரிமனோகரி

**பாப்பிரெட்டிபட்டி** - ஆடுதுறை மு.உத்திராபதி
பெ. பழனியப்பன்
சென்னை அரங்கநாதன்
கொ. ரமேஷ்

**மேட்டூர்** - கந்திலி ந.கரிகாலன்
டி.எம்.செல்வகணபதி, எம்.பி.,
கு.விக்னேஷ்
விசார் க. தமிழரசன்
பி. மகேஷ்

“அண்ணா அறிவாலயம்”
சென்னை – 18.
நாள் : 18–01–2026.

இரா. ராஜீவ்காந்தி
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி